# செலக்சன்

10

## தமிழ்

www.Padasalai.Net

அன்பு நிலையம்
மதுரை - 625001

# செலக்சன்

## பத்தாம் வகுப்பு

# 10 தமிழ்

94430 43338
94430 46662

வெளியிடுபவர்

அன்பு நிலையம்

129, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை – 625001

விலை ₹ 200

(2025-2026 ஆம் ஆண்டு பதிப்பு)

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# பொருளடக்கம்


| வ.எண் | பொருண்மை /இயல் | | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|---|
| | | | மனப்பாடப் பகுதிகள் | 4 |
| 1. | இயல் | 1. அ | அன்னை மொழியே * – செய்யுள் | 8 |
| | ஒன்று | 1. ஆ | பாவாணர் பார்வையில் தமிழ்ச்சொல் வளம் – உரைநடை | 12 |
| | | 1. இ | காலக்கணிதம் * – செய்யுள் | 16 |
| | | 1. ஈ | புயலிலே ஒரு தோணி – துணைப்பாடம் | 21 |
| | | 1. உ | சொல் – இலக்கணம் | 23 |
| | | 1. ஊ | மொழியை ஆள்வோம்! | 26 |
| | | 1. எ | மொழியோடு விளையாடு | 31 |
| 2. | இயல் | 2. அ | கேட்கிறதா என்குரல் ! – உரைநடை | 35 |
| | இரண்டு | 2. ஆ | பரிபாடல் – செய்யுள் | 41 |
| | | 2. இ | மேகம் – செய்யுள் | 44 |
| | | 2. ஈ | பிரும்மம் – துணைப்பாடம் | 45 |
| | | 2. உ | தொகாநிலைத் தொடர்கள் – இலக்கணம் | 46 |
| | | 2. ஊ | மொழியை ஆள்வோம்! | 49 |
| | | 2. எ | மொழியோடு விளையாடு | 52 |
| 3. | இயல் | 3. அ | விருந்து போற்றுதும் ! – உரைநடை | 57 |
| | மூன்று | 3. ஆ | காசிக்காண்டம் * – செய்யுள் | 64 |
| | | 3. இ | முத்துகுமாரசாமி பிள்ளைத்தமிழ் – செய்யுள் | 67 |
| | | 3. ஈ | கோபல்லபுரத்து மக்கள் – துணைப்பாடம் | 69 |
| | | 3. உ | தொகைநிலைத் தொடர்கள் – இலக்கணம் | 71 |
| | | 3. ஊ | மொழியை ஆள்வோம்! | 74 |
| | | 3. எ | மொழியோடு விளையாடு | 77 |
| | | 3. ஏ | திருக்குறள்* | 79 |
| 4. | இயல் | 4. அ | மொழிபெயர்ப்புக் கல்வி – உரைநடை | 84 |
| | நான்கு | 4. ஆ | திருவிளையாடற் புராணம் * – செய்யுள் | 88 |
| | | 4. இ | புதிய நம்பிக்கை – துணைப்பாடம் | 92 |
| | | 4. ஈ | இலக்கணம் – பொது – இலக்கணம் | 93 |
| | | 4. உ | மொழியை ஆள்வோம்! | 96 |
| | | 4. ஊ | மொழியோடு விளையாடு | 99 |


www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




| வ.எண் | பொருண்மை /இயல் | | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|---|
| 5. | இயல் | 5. அ | பன்முகக் கலைஞர் – உரைநடை | 102 |
| | ஐந்து | 5. ஆ | கம்பராமாயணம் * – செய்யுள் | 105 |
| | | 5. இ | பாய்ச்சல் – துணைப்பாடம் | 109 |
| | | 5. ஈ | அகப்பொருள் இலக்கணம் – இலக்கணம் | 111 |
| | | 5. உ | மொழியை ஆள்வோம்! | 114 |
| | | 6. ஊ | மொழியோடு விளையாடு | 118 |
| | | 6. எ | திருக்குறள் * | 120 |
| 6. | இயல் | 6. அ | சிற்றகல் ஒளி – உரைநடை | 124 |
| | ஆறு | 6. ஆ | சிலப்பதிகாரம்* | 129 |
| | | 6. இ | முத்தொள்ளாயிரம்* – செய்யுள் | 133 |
| | | 6. ஈ | மங்கையராய்ப் பிறப்பதற்கே... – துணைப்பாடம் | 136 |
| | | 6. உ | புறப்பொருள் இலக்கணம் – இலக்கணம் | 138 |
| | | 6. ஊ | மொழியை ஆள்வோம்! | 140 |
| | | 6. எ | மொழியோடு விளையாடு | 144 |
| 7. | இயல் | 7. அ | சங்க இலக்கியத்தில் அறம் – உரைநடை | 147 |
| | ஏழு | 7. ஆ | தேம்பாவணி *– செய்யுள் | 151 |
| | | 7. இ | அக்கறை – செய்யுள் | 155 |
| | | 7. ஈ | இராமானுசர் (நாடகம்) – துணைப்பாடம் | 156 |
| | | 7. உ | பா – வகை, அலகிடுதல் – இலக்கணம் | 160 |
| | | 7. ஊ | மொழியை ஆள்வோம்! | 167 |
| | | 7. எ | மொழியோடு விளையாடு | 173 |
| | | 7. ஏ | விதிகளை அறிவோம்! விழிப்புணர்வு தருவோம்! | 175 |
| | | | கடிதங்கள், விண்ணப்பப் படிவங்கள், உறுப்பினர் படிவங்கள், தன்விவரப்பட்டியல், கட்டுரைகள். | 177 |


www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மனப்பாடப்பகுதிகள்

### இயல்–1

**அன்னை மொழியே**
**(மா–25) (சூலை– 24)(சூன்– 23)(மே – 22) (செப் – 21) (பெ.ஆ.க– 4, 6)**
**அழகார்ந்த செந்தமிழே !**

அன்னை மொழியே ! அழகார்ந்த செந்தமிழே !
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே !
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே !

**(மா– 24) (பெ.ஆ.க– 1)**

தென்னன் மகளே ! திருக்குறளின் மாண்புகழே !
இன்னறும் பாப்பத்தே ! எண்தொகையே ! நற்கணக்கே !
மன்னுஞ் சிலம்பே ! மணிமே கலைவடிவே !
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே !

**– பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

**காலக்கணிதம் ( ஏப் – 23) (பெ.ஆ.க – 3)**

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன் !
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்பத றிந்து ஏகுமென் சாலை !
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம் !
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க !
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம் !

**– கண்ணதாசன்**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## இயல் – 6

**சிலப்பதிகாரம் (சூ ன்– 23) (ஆக– 22) (பெ.ஆ.க – 1, 6)**

**மருவூர்ப்பாக்கம்**

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசு அறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

**– இளங்கோவடிகள்**

**முத்தொள்ளாயிரம்**

**சேரநாடு**

அள்ளல் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட (து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

## இயல் – 7

**தேம்பாவணி**

**இயற்கை கொண்ட பரிவு**

**(சூலை– 24) (மே – 22) (செப் –20)(அ.மா.வி–19) (பெ.ஆ.க–2)**

நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர் அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே.

**– வீரமாமுனிவர்**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# செலக்சன்
# 10 தமிழ்

இயல் ஒன்று

## இயல் 1. அமுத ஊற்று

### கவிதைப் பேழை

இயல் 1. அ

**அன்னை மொழியே**
ஆசிரியர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்
இயற்பெயர் : துரை மாணிக்கம்

செய்யுள்

**பாடநூல் வினாக்கள் – விடைகள்**

**பலவுள் தெரிக :**

**1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்............ (சூன்– 23) (மே– 22)(செப்– 21)**

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

**விடை:இ) எம் + தமிழ் + நா**

---

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "மன்னுஞ் சிலம்பே ! மணிமே கலைவடிவே !**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக. (சூலை– 24) (மே– 22) (அ.மா.வி –19)**

**விடை :**

1. சிலப்பதிகாரம் 2. மணிமேகலை 3. சீவகசிந்தாமணி
4. வளையாபதி 5. குண்டலகேசி

---

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை ? (மே–22) (பெ.ஆ.க–2)**

**விடை :**

★ அன்னை மொழி, அழகாய் அமைந்த செந்தமிழ், பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனி.
★ கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து, அரசாண்ட மண்ணுலகப் பேரரசு.
★ பாண்டியமன்னனின் மகள்.
★ திருக்குறளின் பெருமைக்கு உரியவள்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மொழிப்பயிற்சிகள்

### I. சொல்லும் பொருளும்.

| | | | |
|---|---|---|---|
| 1. அன்னை மொழி | – தாய் மொழி | 7. முடிதாழ | – தலை பணிந்து |
| 2. முகிழ்த்த | – தோன்றிய | 8. செப்பரிய | – சொல்லுதற்கரிய |
| 3. தென்னன் | – பாண்டியன் | 9. நெடுநிலைப்பும் | – நீண்ட நிலைத்த தன்மை |
| 4. மாண்புகழ் | – பெரும் பெருமை | 10. உந்தி | – எழுப்பி |
| 5. மன்னும் | – நிலைத்த | 11. தும்பி | – வண்டு |
| 6. முன்னும் | – பொங்கியெழும் | 12. யாண்டும் | – எங்கும் |

### II. இலக்கணக்குறிப்பு தருக.

1. செந்தமிழ், நறுங்கனி, பேரரசு, செந்தாமரை – **பண்புத்தொகை**
2. முகிழ்ந்த, சிறகார்ந்த – **பெயரெச்சம்**
3. மண்ணுலகம் – **உருவகம்**
4. பாப்பத்தே, வாழ்த்துவமே – **விளித்தொடர்**
5. யாண்டும் – **முற்றும்மை**

### III. பகுபத உறுப்பிலக்கணம்.

**1. "வாழ்க" பகுபத உறுப்பிலக்கணம் தருக.** **(மே – 22)**

**விடை :**

வாழ்க – வாழ் + க
வாழ் – பகுதி
க – வியங்கோள் வினைமுற்று விகுதி

**2. "குடித்து" பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**விடை :** குடித்து – குடி+த்+த்+உ
குடி – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**3. "முகிழ்ந்த" பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**விடை :** முகிழ்த்த – முகிழ் + த் + த் + அ
முகிழ் – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

**4. "வாழ்த்துவம்" பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**விடை :** வாழ்த்துவம் – வாழ்த்து + வ் + அம்
வாழ்த்து – பகுதி
வ் – எதிர்கால இடைநிலை
அம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

### IV. பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க :

"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை **(மே – 22) (செப் – 21)**
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்."

**1. எந்தமிழ்நா என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும் :**

அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா
இ) எம்+ தமிழ் + நா ஈ) எந்தம்+ தமிழ் + நா **விடை: இ) எம்+ தமிழ் + நா**

**2. செந்தமிழ் என்பது :**

அ) பண்புத் தொகை ஆ) வினைத் தொகை
இ) உவமைத் தொகை ஈ) உம்மைத் தொகை **விடை: அ) பண்புத் தொகை**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்கண்டு

இயல் 1. உ

## சொல்

இலக்கணம்

### பாடநூல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக :**

**1. "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே... (மா – 24) (பெ.ஆ.க–3)**

அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர் **விடை: ஈ) பாடல் ; கேட்டவர்**

**குறுவினா :**

**1. "பலகை" என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**

**விடை :**

★ பலகை – மரப் பலகையைக் குறிக்கிறது – தனிமொழி
★ பல + கை – ஒன்றுக்கு மேற்பட்ட கைகள் எனப் பொருள் தருகிறது – தொடர்மொழி
★ இவ்வாறு தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் வருவது பொதுமொழி.

**சிறுவினா :**

**1. "<u>அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது</u>" இவை அனைத்தையும் யாம் அறிவோம். இக்கூற்றில் அடிக்கோடிட்ட சொற்களைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக. (மா – 24)**

**விடை :**

| வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|
| அறிந்தது, அறியாதது | அறிதல், அறியாமை |
| புரிந்தது, புரியாதது | புரிதல், புரியாமை |
| தெரிந்தது, தெரியாதது | தெரிதல், தெரியாமை |
| பிறந்தது, பிறவாதது | பிறத்தல், பிறவாமை |

### அரசு & அ.மா.வி, பெ.ஆ.க மற்றும் கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக :**

**1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கின்றவரை அழைத்து வாருங்கள் – இத்தொடர் (அ.மா.வி – 19)**

அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்
இ) செய்தித்தொடர் ஈ) கலவைத்தொடர் **விடை: ஈ) கலவைத்தொடர்**

**2. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது (பெ.ஆ.க – 1)**

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்
**விடை: ஈ) வினையாலணையும் பெயர்**

**3. மலர்விழி பாடினாள் இத்தொடர் (மே – 22)**

அ) பொதுமொழி ஆ) தனிமொழி
இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர் **விடை: இ) தொடர்மொழி**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. 17 ஆம் நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு இன்றும் உலக விந்தையாகத் திகழும் தாஜ்மகால், இன்றளவில் மஞ்சள், பழுப்பு என நிறம் மாறிக் காட்சியளிப்பதன் காரணங்களையும் தீர்வுகளையும் கலந்துரையாடுக.**

**விடை:**

**கபிலன்** : நண்பா உலக அதியசங்களில் உனக்குப் பிடித்தது எது ?
**முகிலன்** : தாஜ்மகால்
**கபிலன்** : தாஜ்மகாலைப்பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்.
**முகிலன்** : தாஜ்மகாலுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து பற்றித் தெரியுமா ?
**கபிலன்** : என்ன ? தாஜ்மகாலுக்கு ஆபத்தா ?
**முகிலன்** : ஆமாம் நண்பா. வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட தாஜ்மகால் ஆங்காங்கே நிறமும் மாறிவருகிறது.
**கபிலன்** : அப்படியா ? ஏன் அவ்வாறு நிறம் மாறுகிறது நண்பா ?
**முகிலன்** : ஆக்ரா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகை, தூசு மற்றும் கழிவு வெளியேற்றங்களால் வெள்ளை நிறம், மஞ்சள், பழுப்பு நிறமாக மாறிக்கொண்டிருக்கிறது.
**கபிலன்** : ஆமாம், அதைத் தடுக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையா ? இதனைத் தடுக்க என்னவழி ?
**முகிலன்** : தாஜ்மகாலைச் சுற்றியுள்ள புகைவிடும் தொழிற்சாலைகளையும், பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலையிலிருந்து வெளியேறும் புகையையும் உடனே தடுக்க உரிய நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டும்.

---

## கவிதைப் பேழை

**இயல் 2. ஆ**

**பரிபாடல்**
**ஆசிரியர்: கீரந்தையார்**

**செய்யுள்**

**பாடநூல் வினாக்கள் – விடைகள்**

**பலவுள் தெரிக :**

**1. பரிபாடல் அடியில் "விசும்பில் இசையில்" என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ? (மா–24) (ஜுன்–23) (பெ.ஆ.க–2) (அ.மா.வி–19)**

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வான்வெளியில், பேரொலியில்
இ) வானத்தில், பூமியில் ஈ) வானத்தையும் பேரொலியையும்

**விடை: ஈ) வானத்தையும் பேரொலியையும்**

---

**குறுவினா :**

**1. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக. (பெ.ஆ.க–1)**

**விடை :**

★ வானம், காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகியவை ஐம்பூதங்களாகும்.
★ இவையே பூமியில் உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் என பரிபாடல் குறிப்பிடுகிறது.

---

**அரசு & அ.மா.வி, பெ.ஆ.க மற்றும் கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**பலவுள் தெரிக :**

**1. 1300 ஆண்டுகளுக்கு முன் அண்டப்பகுதியைப் பற்றி எழுதியவர் ............... .**

அ) அப்பர் ஆ) மாணிக்கவாசகர்
இ) சுந்தர் ஈ) கம்பர் **விடை: ஆ) மாணிக்கவாசகர்**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்பவை கற்றபின்

**1. இன்று நீங்கள் படித்த செய்தித்தாள்களில் உள்ள தொகாநிலைத் தொடர்களைத் தொகுத்து வருக.**

**விடை:**

1. மழை வருமா ? – எழுவாய்த்தொடர்
2. மக்களே வாக்களியுங்கள் – விளித்தொடர்
3. படித்தார் முதல்வர் – வினைமுற்றுத்தொடர்
4. நடந்த கருத்தரங்கம் – பெயரெச்சத்தொடர்
5. பார்க்க வந்தனர் – வினையெச்சத் தொடர்
6. திட்டங்களைக் கூறினார் – வேற்றுமை தொகாநிலைத்தொடர்
7. வருக ! வருக ! என வரவேற்றனர் – அடுக்குத்தொடர்

**2. வண்ணச் சொற்களின் தொடர்வகைகளை எழுதுக.**

1. **பழகப் பழகப்** பாலும் புளிக்கும்
2. **வடித்த கஞ்சியில்** சேலையை அலசினேன்
3. மேடையில் **நன்றாகப் பேசினான்**
4. **வந்தார் அண்ணன்**
5. அரிய **கவிதைகளின் தொகுப்பு** இது

**விடை :**

1. பழகப்பழகப் – அடுக்குத் தொடர்
2. வடித்த கஞ்சியில் – பெயரெச்சத் தொடர்
3. நன்றாகப்பேசினான் – வினையெச்சத் தொடர்
4. வந்தார் அண்ணன் – வினைமுற்றுத் தொடர்
5. கவிதைகளின் தொகுப்பு – வேற்றுமைத் தொடர்

**3. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.**

மாடியிலிருந்து **இறங்கினார் முகமது. அவர் பாடகர்.** பாடல்களைப் **பாடுவதும் கேட்பதும்** அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் **கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும்** கொண்ட குறுந்தகடுகளை **அடுக்கு அடுக்காக** வைத்திருப்பார்.

**விடை :**

1. இறங்கினார் முகமது – வினைமுற்றுத் தொடர்
2. அவர் பாடகர் – எழுவாய்த் தொடர்
3. பாடுவதும் கேட்பதும் – (உம்) இடைச்சொல் தொடர்
4. கேட்ட பாடல் – பெயரெச்சத் தொடர்
5. கேட்காத பாடல் – எதிர்மறை பெயரெச்சத் தொடர்
6. அடுக்கு அடுக்காக – அடுக்குத் தொடர்

**இயல் 2. ஊ**

## மொழியை ஆள்வோம் !

I) புத்தகத்தில் பார்க்கவும்.

**II) கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

**எ.கா : அ) இயற்கை – செயற்கை (மா– 24) (பெ.ஆ.க–3)**

**விடை :** **இயற்கை** வளங்களைக் காக்கச் **செயற்கை**ப் பொருள்களைத் தவிர்ப்போம்.

**ஆ) கொடு – கோடு (மா – 24) (மே – 22)**

**விடை :** **கொடு**ப்பதற்கு எல்லைக் **கோடு** இல்லை.

**இ) கொள் – கோள்**

**விடை :** தன்னம்பிக்கைக் **கொள்**கிறவன் வாழ்வில் உயர்ந்த குறிக்**கோள்**களை அடைந்தே தீருவான்.

**ஈ) சிறு – சீறு (அ.மா.வி–19)**

**விடை :** **சிறு**கச் சிறுகச் சேமித்தால் எதிர்காலத்தில் **சீறு**நடை போடலாம்.

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**6. குயில்களின் கூவலிசை ;. புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும் ; இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம். (செப் – 20)**
**(வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு)**
**தலைப்பு:** வனத்தின் நடனம்

**II) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக: (பெ.ஆ.க – 5)**

**விடை :**



சுவாசிக்கும் காற்று
அசுத்தம் ஆனது
இருக்கும் நிலம்
இயல்பு மாறியது
ஓசோன் மண்டலம்
ஓட்டையானது
மனிதா ! விழித்துக்கொள்
மாசுபட்டு அழிந்துவரும்
இயற்கை வளங்களை
காப்பாற்று.

**III) மாணவர் செயல்பாடு.**

**IV) அகராதியில் காண்க :**

**அகன்சுடர், ஆர்கலி, கட்புள், கொடுவாய், திருவில்**

**விடை :**

| | | |
|---|---|---|
| **அகன்சுடர்** | – | உயர்ந்த தீபம், அகன்ற சுடர். |
| **ஆர்கலி** | – | ஆர்ப்பரிக்கும் கடல், மழை. |
| **கட்புள்** | – | விழித்திருக்கும் பறவை |
| **கொடுவாய்** | – | வளைந்த வாய் |
| **திருவில்** | – | வானவில் |

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



கவிதைப் பேழை

இயல் 3. இ

## முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்

ஆசிரியர் : குமரகுருபரர்

செய்யுள்

### பாடநூல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக :**

**1. காலில் அணியும் அணிகலனைக் குறிப்பது ______**

அ) சுட்டி ஆ) கிண்கிணி

இ) குழை ஈ) சூழி **விடை: ஆ) கிண்கிணி**

**குறுவினா :**

**1. செங்கீரை ஆடுதலில் எந்தெந்த அணிகலன்கள் சூட்டப்படுவதாக முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது ?**

**விடை :** செங்கீரை ஆடுதலில் சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும், ஒளிவீசுகின்ற அரைவட்டங்களும், வட்டவடிவான சுட்டியும், கம்பிகளில் உருவான குண்டலங்களும், காதில் குழைகளும் அணிகலன்களாக சூட்டப்பட்டுள்ளது.

**சிறுவினா :**

**1. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக. (அ.மா.வி–19) (பெ.ஆ.க–1)**

**விடை :**

★ வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாகச் செங்கீரை ஆடியபோது அவன் திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.

★ இடையில் அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவடங்கள் ஆடின.

★ பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடியது.

★ பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவமான சுட்டி பதிந்தாடின.

★ கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்து ஆடின.

★ உச்சிக் கொண்டையும் அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளியுள்ள முத்துகளோடு ஆடின.

★ இவற்றுடன் அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட தொன்மையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகனே ! செங்கீரை ஆடி அருள்க ! எனக் குமரகுருபரர் வேண்டுகிறார்.

### அரசு & அ.மா.வி, பெ.ஆ.க மற்றும் கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக :**

**1. ஆதி வைத்தியநாதன் என அழைக்கப்படுபவர்........... .**

அ) விநாயகர் ஆ) சிவன்

இ) திருமால் ஈ) முருகன் **விடை: ஈ) முருகன்**

**2. சிற்றிலக்கியங்களின் வகைகள் .......... ஆகும்.**

அ) 26 ஆ) 76 இ) 96 ஈ) 108 **விடை: இ) 96**

**3. செங்கீரைப்பருவம் பிள்ளைத்தமிழில் எந்தப்பருவமாக விளங்குகிறது ?**

அ) இரண்டாம் பருவம் ஆ) ஐந்தாம் பருவம்

இ) முதற்பருவம் ஈ) மூன்றாம் பருவம் **விடை: அ) இரண்டாம் பருவம்**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் 3. உ

கற்கண்டு

## தொகை நிலைத் தொடர்

இலக்கணம்

### பாடநூல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக :**

**1. நன்மொழி என்பது..........**

அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை
இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை **விடை: அ) பண்புத் தொகை**

**குறுவினா :**

**1. <u>கல்வியும் செல்வமும்</u> பெற்ற பெண்கள், <u>விருந்தும் ஈகையும்</u> செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார் – அடிக்கோடிட்ட சொற்களை உம்மைத்தொகையாக மாற்றி எழுதுக.**

**விடை :**

1. கல்வி செல்வம் – உம்மைத்தொகை
2. விருந்து ஈகை – உம்மைத்தொகை

**2. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களின் வகையைக் கண்டறிந்து விரித்து எழுதுக: (ஆக –22) (செப் –20) (பெ.ஆ.க – 4)**

**விடை :**

1. தண்ணீர்குடி – தண்ணீரைக் குடி. – இரண்டாம் வேற்றுமைத் தொகை
   மாலதி தண்ணீரைக் குடித்தாள்.
2. தயிர்க்குடம் – தயிரை உடைய குடம். – இரண்டாம் வேற்றுமை உருபும், பயனும் உடன் தொக்க தொகை.
   உமா தயிர்க்குடத்தை எடுத்து வந்தாள்.

**சிறுவினா :**

**1. மார்கழித் திங்கள் அதிகாலை நேரத்தில் மக்கள் நடைப்பயிற்சி மேற்கொண்டனர். சிலர் மிதிவண்டியில் சென்றனர். சாலை ஓரத்தில் இருந்த வீட்டின் மதிலை ஒட்டிச் செங்காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்கியபடி இருந்தன. அவற்றைப் பார்த்தபடியே வீடுசென்றேன்.**
**– பத்தியைப் படித்துத் தொகைநிலைத் தொடர்களைக் கண்டிறிந்து எழுதுக.**

**விடை :**

1. மார்கழித் திங்கள் – இருபெயரொட்டுப் பண்புத் தொகை
   மார்கழி – சிறப்புப் பெயர்
   திங்கள் – பொதுப்பெயர்
2. செங்காந்தள் – பண்புத் தொகை (செம்மையாகிய காந்தள்)
3. வீடு சென்றேன் – வேற்றுமைத்தொகை (வீட்டிற்குச் சென்றேன்)

### அரசு & அ.மா.வி, பெ.ஆ.க மற்றும் கூடுதல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக :**

**1. தமிழ்த்தொண்டு என்னும் தொடர் ................ . (பெ.ஆ.க – 5)**

அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை
இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை ஈ) வேற்றுமைத் தொகை
**விடை: இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை**

**2. தேர்ப்பாகன் – இத்தொடரில் அமைந்துள்ள தொகையைத் தெரிவு செய்க. (ஏப் – 23)**

அ) வினைத் தொகை ஆ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை
இ) பண்புத் தொகை ஈ) இருபெயரொட்டு பண்புத்தொகை
**விடை: ஆ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**சிறுவினா :**

**1. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகை நிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக. (சூலை–24) (ஏப்–23) (மே– 22) (பெ.ஆ.க–1)**

**விடை :**

| எண் | தொகைச் சொற்கள் | தொகைநிலைத்தொடர்களின் வகைகள் | விரித்து எழுததல் |
|---|---|---|---|
| 1. | மல்லிகைப்பூ<br>மல்லிகை – சிறப்புப் பெயர்<br>பூ – பொதுப்பெயர் | இருபெயரொட்டுப் பண்புத் தொகை. | மல்லிகைப்பூ |
| 2. | ஆடுமாடுகள் | உம்மைத் தொகை. | ஆடுகளும் மாடுகளும் |
| 3. | தண்ணீர்த் தொட்டி | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. | தண்ணீரை உடையத் தொட்டி |
| 4. | குடிநீர் | வினைத் தொகை | குடித்த நீர், குடிக்கின்ற நீர், குடிக்கும் நீர். |
| 5. | சுவர்க்கடிகாரம் | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. | சுவரின் கண் உள்ள கடிகாரம் |
| 6. | மணி பார்த்தாள் | இரண்டாம் வேற்றுமைத் தொகை. | மணியைப் பார்த்தாள் |

**கற்பவை கற்றபின்**

**வண்ணமிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக**

1. **அன்புச் செல்வன்** திறன்பேசியின் **தொடுதிரை**யில் படித்துக்கொண்டிருந்தார். (ஏப் – 23)

**விடை :** **அன்புச் செல்வன்** – இருபெயரொட்டுப் பண்புத் தொகை
**தொடுதிரை** – வினைத் தொகை

2. அனைவருக்கும் **மோர்ப்பானை**யைத் திறந்து **மோர் கொடுக்கவும்.**

**விடை :** **மோர்ப்பானை** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
**மோர் கொடுக்கவும்** – இரண்டாம் வேற்றுமைத் தொகை

3. **வெண்டைக்காய்ப்** பொரியல் **மோர்க்குழம்புக்குப்** பொருத்தமாக இருக்கும்.

**விடை :** **வெண்டைக்காய்** – இருபெயரொட்டுப் பண்புத் தொகை
**மோர்க்குழம்பு** – இருபெயரொட்டுப் பண்புத் தொகை

4. **தங்கமீன்கள் தண்ணீர்த்தொட்டி**யில் விளையாடுகின்றன.

**விடை :** **தங்கமீன்கள்** – உவமைத் தொகை
**தண்ணீர்த் தொட்டி** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



6. **விடு – வீடு :** குப்பைகளை நீக்கி **விடு**, **வீடு** சுத்தமாகும். **(பெ.ஆ.க – 5) (மே – 22)**

**கூடுதல் வினாக்கள் – விடைகள் :**

1. **கொடு – கோடு :** **கொடு**ப்பதற்கு எல்லைக் **கோடு** இல்லை. **(மா – 24) (மே – 22)**
2. **இயற்கை – செயற்கை :** பாதை தெரியாத **இயற்கை**க் காடுகளில் பயனிக்க **செயற்கை**க் கருவிகள் பயன்படுகின்றன. **(மா – 24) (பெ.ஆ.க – 3)**
3. **தான் – தாம் :** **தான்** கற்ற கல்வியை மற்றவருக்குத் **தாமே** கற்பிக்க வேண்டும். **(பெ.ஆ.க – 3)**

**III) அகராதியில் கண்டு பொருள் எழுதுக:**

**அ) ஊண், ஊன். ஆ) திணை, தினை. இ) அண்ணம், அன்னம். ஈ) வெல்லம், வெள்ளம்.**

**விடை :**

| | | | |
|---|---|---|---|
| அ) ஊண் | – உணவு. | ஊன் | – இறைச்சி. |
| ஆ) திணை | – ஒழுக்கம். | தினை | – சிறுதானியம். |
| இ) அண்ணம் | – மேல்வாய். | அன்னம் | – பறவை. |
| ஈ) வெல்லம் | – இனிப்புப் பொருள். | வெள்ளம் | – நீர்ப்பெருக்கு. |

**IV) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (ஆக – 22)**



**விடை :**
உண்மையான இரக்க
உணர்வு என்பது
ஏதையாவது கொடுப்பதோ,
வாங்குவதோ அல்ல
எது தேவையானதோ அதை
அந்த நேரத்தில் செய்வதுதான்.

**V) செயல்திட்டம் :**

**உணவு, விருந்து சார்ந்த பழமொழிகளையும் விழிப்புணர்வுத் தொடர்களையும் திரட்டி, அகரவரிசைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

**எ.கா : நொறுங்கத்தின்றால் நூறு வயது.**

**விடை :**

| பழமொழி | தொடர் |
|---|---|
| 1. பழகப் பழகப் பாலும் புளிக்கும் | வாழ்வதற்காக உண்; உண்பதற்காக வாழாதே. |
| 2. வாழை வாழவைக்கும் | இருப்பதினால் புசிக்காதே. |
| 3. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே | வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான். |
| 4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை | பசியைத் தேடு; ருசியைத் தேடாதே ! |

**VI) படிப்போம் ; பயன்படுத்துவோம் (கலைச் சொற்கள் தருக):**

1. Hospitality – விருந்தோம்பல்
2. Wealth – செல்வம்
3. Baby shower – வளைகாப்பு
4. House warming – புதுமனை புகுவிழா
5. Feast – விருந்து


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கற்பவை கற்றபின்

**1. படங்கள் உணர்த்தும் குறளின் கருத்தினை மையமிட்டு வகுப்பில் கலந்துரையாடுக.**

| | |
|---|---|
|  |  |
| முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும். | பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல்; கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண். |

**விடை :**

**படம் : 1 அ)**

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

**மாணவன் 1** : நண்பா! மேற்கண்ட படத்தைக் காணும்போது உனக்கு என்ன தோன்றுகிறது.

**மாணவன் 2** : "உழைப்பின் வேரோ கசப்பு : கனியோ இனிப்பு " என்ற பழமொழி நினைவுக்கு வருகிறது நண்பா !

**மாணவன் 1** : எப்படி! விளக்கமாகச் சொல் ?

**மாணவன்2** : "தன் கையே தனக்கு உதவி " என்ற உயரிய சிந்தனையோடு தன் உழைப்பையே மூலதனமாகக் கொண்டு வாழும் அந்த மாட்டுவண்டிக்காரரின் உழைப்பு சோம்பலின்மையை வெளிக்காட்டுகிறது.

**மாணவன்1** : நண்பா ! இப்படத்தின் மூலம் நீ சொல்ல விரும்பும் கருத்து என்ன ?

**மாணவன்2** : தன்னம்பிக்கையோடு உழைப்பவனிடத்தில் ஒரு போதும் வறுமை தங்காது என்பதே இப்படத்தின் மூலம் நான் கூற விரும்பும் கருத்தாகும்.

**படம் : 1 ஆ)**

**மாணவன்3** : இப்படம் "உழைப்பின்றி ஊதியமில்லை" என்ற பொன்மொழியை உணர்த்துவதாக உள்ளது. காரணம் குடும்பத்தலைவன் சோம்பலுடன் உழைப்பின்றி இருப்பதால் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடுகிறது.

**படம் : 2 அ)**

**பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் : கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.**

**மாணவன்1** : மேற்கண்ட படத்தின் மூலம் நீ அறியும் கருத்தைக் கூறு நண்பா !

**மாணவன்2** : பிறரிடம் யாசகம் கேட்பது இழிவான செயலாகும். ஆனால் தன்னிடம் ஒருவர் இரந்து கேட்டும் கொடுக்காமல் இருப்பது அதனினும் இழிவான செயலாகும்.

**மாணவன் 1** : மேற்கண்ட குறளோடு படத்தில் காணும் காட்சியை ஒப்பிட்டுக் கூறு நண்பா !

**மாணவன் 2** : திருவள்ளுவர் "கண்ணோட்டம்" என்ற குறளில் அற்புதமாக கூறியுள்ளார். இரக்கம் இல்லாத கண்களால் பயன் இல்லை என்கிறார்.

**படம் : 2 ஆ)**

**மாணவன் 3** : இசையோடு பாடல் பொருந்தவில்லை என்றால் யாரும் விரும்பமாட்டார்கள். பாடலும் இசையும் வேறுபட்டால் பயன் இல்லை. அதுபோல இரக்கமில்லாதவனிடத்தில் கண் இருந்தும் பயனில்லை.

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கவிதைப் பேழை

**இயல் 4. ஆ**

**திருவிளையாடற் புராணம்**
**ஆசிரியர்: பரஞ்சோதி முனிவர்**

**செய்யுள்**

**பாடநூல் வினாக்கள் – விடைகள்**

**பலவுள் தெரிக :**

**1. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ................. இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் .............**

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

**விடை : ஈ) மன்னன், இறைவன்**

---

**குறுவினா :**

**1. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்"**
**– இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார் ? காதல்மிகு கேண்மையினான் யார் ? (பெ.ஆ.க –2)**

**விடை :**

★ கழிந்த பெரும் கேள்வியினான் (கல்வியறிவு மிக்கவன்) – பாண்டிய மன்னன் குலேச பாண்டியன்
★ காதல்மிகு கேண்மையினான் (நண்பன்) – புலவர் இடைக்காடனார்

---

**2. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| அமர்ந்தான் | – | அமர் + த் (ந்) + த் + ஆன் |
| அமர் | – | பகுதி |
| த் | – | சந்தி, த் (ந்) ஆனது விகாரம் |
| த் | – | இறந்தகால இடைநிலை |
| ஆன் | – | ஆண்பால் வினைமுற்று விகுதி |

---

**சிறுவினா :**

**1. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன் ? விளக்கம் தருக. (ஜூலை – 24) (ஜூன் – 23) (பெ.ஆ.க – 3)**

**விடை :**

★ பாண்டியமன்னன் குலேச பாண்டியனிடம் இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையைப் பாட, அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் பாடலை இகழ்ந்தார்.

★ மனம்வருந்திய இடைக்காடனார் இறைவனிடம் "பாண்டியன் என்னை இகழவில்லை, பார்வதி தேவியையும், உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச்சென்றார்.

★ இடைக்காடனாருக்கு மகிழ்ச்சியைத் தரவும், மன்னனின் பிழையை உணர்த்தவும் நினைத்தார். தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்துக்கொண்டு உமாதேவியாரோடு கடம்பவனக் கோவிலை விட்டு வெளியேறி வடக்கே வையை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோவிலை உருவாக்கித் தங்கினார்.

★ இதை அறிந்த மன்னன் இறைவனிடம் தன் பிழையைப் பொறுத்து அருள்புரியுமாறு வேண்டினான். அதற்கு இறைவன் இடைக்காடனின் கவிதையை இகழ்ந்ததால் யாம் இங்கு வந்துள்ளோம் என வானிலிருந்து ஒலித்தார்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



★ அதனைக் கேட்ட மன்னன் மனம்மாறி, புலவர்கள் சூழ இடைக்காடனாருக்கு மங்கல ஒப்பனை செய்து பொன் இருக்கையில் அமர்த்திச் சிறப்புச் செய்தான். மேலும் தன் குற்றத்தையெல்லாம் பொறுத்துக்கொள்ளுமாறு பணிந்து வணங்கினான்.

---

**நெடுவினா :**

**1. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. (பெ.ஆ.க – 1)**

**விடை :**

**குறிப்புச் சட்டகம் : இடைக்காடனார் கவிதை படித்தல்–இடைக்காடனார் இறைவனிடம் முறையிடுதல்–இறைவன் திருக்கோவிலை விட்டு வெளியேறுதல்–மன்னன் இறைவனிடம் வேண்டுதல்–இறைவனின் குரல்–இவைனிடம் மன்னன் வேண்டுதல்–இடைக்காடனாருக்கு மரியாதை செய்தல்–மன்னன் புலவரிடம் வேண்டுதல்.**

**இடைக்காடனார் கவிதை படித்தல் :**

★ கலைகளை முழுவதும் உணர்ந்த நண்பர் கபிலனின் மேல் அன்புகொண்ட இடைக்காடனார் தேன் ஒழுகும் வேப்பமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று, தன் கவிதையைப் படித்தார். ஆனால் பாண்டிய மன்னன் குலேச இடைக்காடனார் கவிதையைப் பொருட்படுத்தாமல் அவரை அவமதித்தான்.

**இடைக்காடனார் இறைவனிடம் முறையிடுதல் :**

★ இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, "பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக்கேட்டு, அவன் முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்" என்றார். "பாண்டிய மன்னன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச்சென்றார். இடைக்காடனாரின் சொல் வேற்படை போல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.

**இறைவன் திருக்கோவிலை விட்டு வெளியேறுதல் :**

★ இறைவன் ஞானமயமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடு கடம்பவனத் திருக்கோவிலை விட்டு வெளியேறி வடக்கே வையை ஆற்றின் தென்பக்கத்தே ஒரு திருக்கோவிலை உருவாக்கி அங்குச் சென்று இருந்தார்.

**மன்னன் இறைவனிடம் வேண்டுதல் :**

★ "இறைவனே என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால்,காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ் நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா ? மறையவர் நல் ஒழுக்கத்தில் குறைந்தனரோ ? தவமும் தருமமும் சுருங்கியதோ ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ ? எமது தந்தையே யான் அறியேன்" என்று பாண்டிய மன்னன் இறைவனிடம் வேண்டினான்.

**இறைவனின் குரல் :**

★ இறைவன் மன்னனிடம் " சிறந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கடம்பவனத்தை விட்டு ஒருபோதும் நீங்க மாட்டோம். இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்" எனக் கூறினார்.

**இறைவனிடம் மன்னன் வேண்டுதல்:**

★ பாண்டிய மன்னன் இறைவனிடம் "உமையை ஒரு பாகத்திற்கொண்ட மேலான பரம்பொருளே !, புண்ணியனே !, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவர்களுக்குப் பெருமையல்லவா ?" என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டி போற்றினான்.

**இடைக்காடனார்க்கு மரியாதை செய்தல் :**

★ மன்னனது மாளிகை அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை, பூரணகும்பம், கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது; போற்றத்தக்க ஒளிகளையுடைய மணிகள் பதிக்கப்பெற்றது.

★ அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**V) காட்சியைக் கவிதையாக்குக:**
**விடை :**

வீடு கட்ட
மரத்தை வெட்டினோம்.
விரைவாய்ச் செல்ல
காடுகளை அழித்தோம்.
தொழில் வளரத்
தோப்புகளை ஒழித்தோம்.
பொழுதுபோக்கிற்காக
பொக்கிசத்தை மறைத்தோம்.
இறுதியாக
ஓவியத்தில் காண்கிறோம்.



**VI) நிற்க அதற்குத் தக.... (ஏப்–23) (ஆக – 22) (பெ.ஆ.க – 4)**

| வ. எண். | பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|---|
| 1. | நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | அதிகாலையில் எழுவேன். |
| 2. | ஆசிரியர் பேச்சைக் கேட்பேன். | பெற்றோர் பேச்சைக் கேட்பேன். |
| 3. | பணிவுடன் நடந்துகொள்வேன். | பெரியவர்களிடம் பணிந்து நடந்துகொள்வேன். |
| 4. | நண்பர்களுடன் உரையாடுவேன். | உறவினர்களுடன் உரையாடுவேன். |
| 5. | நண்பர்களுக்கு உதவுவேன். | பெற்றோருக்கு உதவுவேன். |

**VII) படிப்போம் பயன்படுத்துவோம்! (கலைச்சொல் அறிவோம்)**

1. Translation – மொழிபெயர்ப்பு
2. Culture – பண்பாடு
3. Human Resource – மனித வளம்
4. Transfer – மாறுதல்
5. Multi media – பல்துறை ஊடகம்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் ஐந்து

# இயல் 5. நிலா முற்றம்

இயல் 5. அ

## உரைநடை உலகம்

## பன்முகக் கலைஞர்

உரைநடை

### பாடநூல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக :**

1. **கூற்று 1 :** போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.
   **கூற்று 2 :** அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.
   அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு
   இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி
   **விடை : ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி**

2. **தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது.– இத்தொடருக்கான வினா எது ?**
   அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார் ?
   ஆ) கலைஞர் என்ற சிறப்புப் பெயர் எப்போது வழங்கப்பட்டது ?
   இ) தூக்குமேடை என்பது திரைப்படமா ? நாடகமா ?
   ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது ?
   **விடை: ஆ) கலைஞர் என்ற சிறப்புப் பெயர் எப்போது வழங்கப்பட்டது ?**

---

**குறுவினா :**

**1. அயற்கூற்றாக எழுதுக : "கலைஞர், பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" – பேராசிரியர் அன்பழகனார்.**

**விடை :** பேராசிரியர் அன்பழகனார் கலைஞரை, பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர் என்றும், படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர் என்றும் கூறினார்.

---

**சிறுவினா :**

**1. தமிழ் மொழிக்குக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.**

**விடை :**

1. முத்தமிழ் அறிஞர் கலைஞர், மனோன்மணியம் சுந்தரனாரின் " நீராருங் கடலுடுத்த" என்னும் பாடலை அரசு விழாக்கள் அனைத்திலும் தொடக்கப்பாடலாகப் பாடுவதற்கு வழிவகுத்தார்.
2. தமிழ் வளர்ச்சித் துறை எனப் புதிதாக ஒரு துறையை உருவாக்கி அதற்குத் தமிழறிஞர் ஒருவரையே அமைச்சராக்கினார்.
3. 2010–ஆம் ஆண்டு கோவையில் செம்மொழி மாநாட்டை நடத்தினார்.

---

**நெடுவினா :**

**2. போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. (மா–25)**

**விடை :**

**குறிப்புச் சட்டம் : முன்னுரை – போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் – முடிவுரை**

**முன்னுரை :** கலைஞர் பகுத்தறிவுக் கொள்கை பரப்பும் சிந்தனையாளர், பேச்சாளர், எழுத்தாளர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர்."முத்தமிழ் அறிஞர்" "சமூக நீதி காவலர்" என்றெல்லாம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



கற்கண்டு

இயல் 5. ஈ

## அகப்பொருள் இலக்கணம்

இலக்கணம்

### பாடநூல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக :**

**1. சித்திரை, வைகாசி மாதங்களை ........... காலம் என்பர்.**

அ) முதுவேனில் ஆ) பின்பனி
இ) முன்பனி ஈ) இளவேனில் **விடை: ஈ) இளவேனில்**

**2. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்............. (சூலை–24) (மா–24) (பெ.ஆ.க – 3)**

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**விடை: இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்**

---

**குறுவினா :**

**2. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத முதல் கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**
**உழவர்கள் மலையில் உழுதனர்.**
**முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.**

**விடை :**

★ **குறவர்கள்** மலையில் **தேன் எடுத்தனர்.**
★ **நெய்தல்** பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

---

**சிறுவினா :**

**1. "கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது ; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன." – காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக. (பெ.ஆ.க–3)**

**விடை :**

| ஐந்திணைகள் | திணைநிலைத் தொழில்கள் | இன்றைய வளர்ச்சி |
|---|---|---|
| குறிஞ்சி | மலைப்பகுதிகளில் தேன், கிழங்கு, மூலிகை சேகரிக்கப்பட்டது. | தேனீ வளர்ப்பு, கிழங்கு பயிரிடுதல், மூலிகை வளர்ப்பு நடைபெறுகிறது. |
| முல்லை | காடு சார்ந்த பகுதிகளில் நிரை மேய்த்தல் தொழில் நடைபெற்றது. | பண்ணைகளில் ஆடு, மாடு வளர்க்கப்படுகிறது. |
| மருதம் | சமநிலப்பகுதிகளில் நெல்லரிதல், சிறுதானியங்கள் பயிரிடுதல் போன்ற வேளாண்மைத் தொழில் நடைபெற்றது. | உழுதல் முதல் தானியங்களை சேகரித்தல் வரை இயந்திரம் மூலம் நடைபெறுகிறது. |
| நெய்தல் | கடல் சார்ந்த பகுதிகளில் மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் போன்ற தொழில் நடைபெற்றது. | இயந்திரப்படகு மூலம் மீன்கள் பிடிக்கப்படுகிறது. இயந்திரங்களை பயன்படுத்தி உப்புக் காய்ச்சுதல் தொழில் நடைபெறுகிறது. |
| பாலை | சுரம் சார்ந்த நிலத்தில் வேட்டையாடுதல், சுரங்கத் தொழில் நடைபெற்றது. | நவீன இயந்திரம் மூலம் தரை குடையப்பட்டு சுரங்கத் தொழில் நடைபெறுகிறது. |

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



VI) கீழ்க்காணும் உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் கலைத்திறனோடு தந்து இன்றளவும் தொடர்வன நிகழ்த்துக்கலைகள். கிராமப்புற / சிற்றூர் மக்களின் கலை, அழகியல், பண்பாடு ஆகியவற்றில் எச்சங்களாக இருப்பவை இவை.



வடிவங்களைக் கொண்டு நிகழ்த்துக் கலைகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

அ) கரகாட்டம், காவடியாட்டம்–தலையில்/ தோளில் கருவியைச் சுமந்தபடி ஆடுபவை.

ஆ) மயிலாட்டம், பொய்க்கால், குதிரையாட்டம், புலியாட்டம்–வேடம் கட்டி ஆடுபவை.

இ) ஒயிலாட்டம், தப்பாட்டம், தேவராட்டம், சேர்வையாட்டம் – குழுவாக ஆடுபவை.

ஈ) தெருக்கூத்து, தோற்பாவைக் கூத்து – கதையைத் தழுவி ஆடும் ஆட்டங்கள்.

தலையில் கரகம் என்னும் குடத்தை வைத்துக் கொண்டு ஆடும் கரகாட்டமும் தோளில் காவடியைச் சுமந்தவாறு ஒய்யாரமாக ஆடும் காவடியாட்டமும் மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைவடிவங்கள். மயில்வடிவக் கூட்டுக்குள் இருந்துகொண்டு, நையாண்டி மேளத்திற்கு ஏற்ப ஆடும் மயிலாட்டமும் குதிரை வடிவக் கூட்டுக்குள் இருந்து, பாதத்துக்குக் கீழ் கட்டையைக் கட்டிக்கொண்டு "டக்டக்" என்று ஆடும் குதிரையாட்டமும் புலி வேடமிட்டு ஆடும் புலியாட்டமும் காண்பதற்கு உற்சாகம் தரக்கூடிய நிகழ்த்துக்கலைகள்.



இசைக்கேற்ப, துணியை வீசிக் குழுவாக ஆடும் ஒயிலாட்டம், தப்பு என்னும் தோற்கருவியின் தாளத்திற்கு ஆடும் தப்பாட்டம், தேவராட்டம், சேர்வையாட்டம் ஆகியவை கிராமியக் கலைஞர்களால் நிகழ்த்தப்படும் கலைவடிவங்கள். இவற்றுக்கெல்லாம் சிகரமாகத் திறந்தவெளிகளையும் தெருமுனைகளையும் மேடையாக்கி எளிய ஒப்பனைகளுடன் நிகழ்த்தப்படும் கலையாகத் தெருக்கூத்து விளங்குகிறது. கதையொன்றில் இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவை இணைந்த வடிவமே தெருக்கூத்து ஆகும். இதே கதை, பாடல், ஆடல்களுடன் தோலால் செய்த வெட்டு வரைபடங்களைத் திரைச்சீலையில் ஒளி ஊடுருவும் வகையில் பொருத்தி, அவற்றை நாடகம் போல நிகழ்த்துவது தோற்பாவைக் கூத்தாகும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவரும் கலையிது.





ஊரக மக்களின் வாழ்வியலில் கலந்தவை நிகழ்த்துக்கலைகள். இவை உழைப்பாளிகளின் உணர்வு வெளிப்பாடு; வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடி; மக்களின் சமய வழிபாட்டிலும் வாழ்வியல் நிகழ்வுகளிலும் பிரிக்க முடியாத பண்பாட்டுக் கூறு. இத்தகைய சிறப்புகளைக் கொண்டுள்ள நிகழ்த்துக்கலைகளை நாம் பாதுகாக்க வேண்டும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**II) பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

**தங்கும், மரம்வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, பார்ப்பவர், விருது, தோற்பவர், கவிழும், விருந்து**

1. விரட்டாதீர்கள் – பறவைக்கு மரம் வீடு
   வெட்டாதீர்கள் – மனிதருக்கு அவை தரும் ............. **விடை : மரவீடு**
2. காலை ஒளியினில் மலரிதழ் ................ (பெ.ஆ.க – 4) **விடை : அவிழும்**
   சோலைப் பூவினில் வண்டினம் ................ **விடை : கவிழும்**
3. மலை முகட்டில் மேகம் .............. – அதைப் **விடை : தங்கும்**
   பார்க்கும் மனங்கள் செல்லத் ............ (பெ.ஆ.க – 4) **விடை : தயங்கும்**
4. வாழ்க்கையில் ................. மீண்டும் வெல்வர் – இதைத் **விடை : தோற்பவர்**
   தத்துவமாய்ப் ................ முயற்சி மேற்கொள்வர். (அ.மா.வி–19) **விடை : பார்ப்பவர்**
5. கைதட்டலே கவிஞர்க்கு ................. அவையோரின் **விடை : விருது**
   ஆர்வமே அவருக்கு................ **விடை : விருந்து**

**III) அகராதியில் காண்க.**

**தால், உழுவை, அகவுதல், ஏந்தெழில், அணிமை**


**விடை :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தால் | – | தாலாட்டு, நாக்கு | ஏந்தெழில் | – | மிக்க அழகு |
| உழுவை | – | புலி, ஒருவகை மீன் | அணிமை | – | சமீபம், அண்மை, பக்கம் |
| அகவுதல் | – | ஒலித்தல், பாடுதல், குரல் எழுப்புதல் | | | |

**IV) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**

**விடை :**

ஆடுவோம் மேள தாளத்தோடு
பாடுவோம் பம்பை உடுக்கையோடு
வண்ண துணியசைத்து சலங்கை ஒலித்திட
வட்டமாய் ஆடுவோம்
எண்ணக்கருத்துகளை எல்லோருக்கும் கூறுவோம்.



**V)** மாணவர் செயல்பாடு

**VI) நிற்க அதற்குத் தக.....**

தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று வாழ்ந்து மறைந்தவர் கலைஞர். அவர் எழுதியது தமிழின் சுவையை; அவர் எண்ணியது தமிழரின் உயர்வை ; அவர் உயர்த்தியது தமிழ்நாட்டின் கலைகளை! நீங்கள் படித்து முடித்தப்பின் உங்கள் துறையின் அறிவைக் கொண்டு தமிழுக்குச் செய்யக்கூடிய தொண்டுகளை வரிசைப்படுத்துக.

| | |
|---|---|
| 1. | **என் துறையில் வல்லுநரானபின், அத்துறையினைப் பற்றிய நூல்களைத் தமிழாக்கம் செய்வேன்.** |
| 2. | **என் துறையில் இருக்கும் கலைச்சொற்களைத் தமிழில் மாற்றி மக்களின் பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவேன்.** |
| 3. | **தமிழ்மொழி சார்ந்த இணையதளங்கள், சமூக வலைத்தளங்கள், செயலிகள் மூலம் தமிழ்மொழிப்பயன்பாட்டைப் பரப்புவேன்.** |

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் 6. ஆ

# கவிதைப் பேழை

## சிலப்பதிகாரம்

ஆசிரியர்: இளங்கோவடிகள்

செய்யுள்

பாடநூல் வினாக்கள் – விடைகள்

**குறுவினா :**

**1. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர் ? (மா–25) (சூலை – 24) (ஆக–22) (பெ.ஆ.க– 5)**

**விடை :**

| | | |
|---|---|---|
| பாசவர் | – | வெற்றிலை விற்போர். |
| வாசவர் | – | நறுமணப் பொருள் விற்போர். |
| பல்நிணவிலைஞர் | – | பலவகையான புலால் கறிகளை விற்போர். |
| உமணர் | – | வெண்மையான உப்பு விற்போர். |

**சிறுவினா :**

**1. பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

"பகர்வனர் திரிதரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்" (ஏப்–23)

**அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது ?**

**விடை :** சிலப்பதிகாரம்

**ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.**

**விடை :**

**சீர்மோனை :** பட்டினும் – பருத்தி ; தூசும் – துகிரும்

**அடிமோனை :** பகர்வனர் | நகரவீதியும்
பட்டினும் | நூலினும்

**இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.**

**விடை :**

**சீர் எதுகை :** பகர்வனர் – நகரவீதி ; காருகர் – இருக்கை

**அடி எதுகை :** பட்டினும் | பருத்தி
கட்டு | காருகர்

**ஈ) காருகர் – பொருள் தருக.**

**விடை :** நெய்பவர் (நெசவாளர் / சாலியர்)

**உ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப்பொருள்கள் யாவை ?**

**விடை :** சந்தனம், அகில்

**2. பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.**

**மருவூர்ப்பாக்கம்**

**மருவூர்ப்பாக்கம் என்பது நகரின் உட்பகுதியாகும். பட்டினப்பாக்கம் என்பது கடற்கரைக்கு அருகிலுள்ளபகுதியாகும். தொழில்கள் மிக்க பகுதி மருவூர்ப்பாக்கம்; வாணிபம் செய்வோரும், தொழில் செய்வோரும் வாழ்ந்த பகுதி அது. அங்கே தெருக்கள் தனித்தனியே இன்ன இன்ன தொழிலுக்கு என வகைப்படுத்தி இருந்தன. நறுமணப் பொருள் விற்போர் ஒரு தனித்தெருவில் குடி இருந்தனர். நூல் நெய்வோர் தனிவீதியில் இருந்தனர். பட்டும், பொன்னும், அணிகலன்களும் விற்போர் தனிவீதியில் தங்கி இருந்தனர். பண்டங்களைக் குவித்து விற்கும் தெரு கூலவீதி எனப்பட்டது. அப்பம் விற்போர், கள் விற்போர், மீன் விலை பகர்வோர், வெற்றிலை, வாசனைப் பொருள்கள் விற்போர், இறைச்சி, எண்ணெய் விற்போர்,**

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பொன், வெள்ளி, செம்புப் பாத்திரக் கடைகள் வைத்திருப்போர், பொம்மைகள் விற்போர், சித்திர வேலைக்காரர், தச்சர், கம்மாளர், தோல் தொழிலாளர், விளையாட்டுக் கருவிகள் செய்வோர், இசைவல்லவர்கள், சிறுதொழில் செய்பவர்கள் இவர்கள் எல்லாம் ஒரு பகுதியில் வாழ்ந்து வந்தனர்.**

**விடை :** **மையக்கருத்து**

மருவூர்ப்பாக்கம் தொழில்கள் மிக்க பகுதி. வாணிபம் செய்வோரும், தொழில் செய்வோரும் வாழ்ந்த பகுதி. நகரின் உட்பகுதியாகும். மருவூர்ப்பாக்கத்தின் வணிக வீதிகள் எவ்வாறு இருந்தன என்பதை இப்பத்தியானது மையக்கருத்தாகக் கூறுகிறது. அங்கேதெருக்கள் தனித்தனியே இன்ன இன்ன தொழிலுக்கு எனவகைப்படுத்தி இருந்தன என்பதை இப்பகுதியானது கூறுகிறது. நறுமணப் பொருட்களிலிருந்து உணவுப் பொருட்கள் வரையும், கைவினைப் பொருட்களிலிருந்து சிறுதொழில் செய்பவர் வரையும் எவ்வீதிகளில் கிடைக்கும், அவர்கள் எங்கே வாழ்ந்தார்கள்என்பதை விளக்குகிறது.

---

**நெடுவினா :**

**1.சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. (சூலை–24)(ஏப்–23)(ஆக–22)(செப்–21) (அ.மா.வி–19)(பெ.ஆ.க.–2)**

**விடை :**

**முன்னுரை :** சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் முதல் இக்கால வணிக வளாகம் அங்காடிகள் காலச்சூழலுக்கு ஏற்ப வளம் பெற்றுக் காணப்படுவதை இக்கட்டுரை விளக்குகிறது.

| வ. எண். | சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் | இக்கால வணிக வளாகங்கள், அங்காடிகள் |
|---|---|---|
| 1. | நறுமணப்பொருட்கள், வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, மனச்சாந்து, பூ, அகில் போன்றவற்றை வீதிகளில் வணிகம் செய்தனர். | நறுமணப் பொருட்கள் போன்றவை கடைகளில் மட்டுமே பெரும்பாலும் விற்கப்படுகின்றன. |
| 2. | பட்டு, பருத்தி, நூல், முடி ஆகியவற்றினைக் கொண்டு நூற்கும் கைத்தொழில் வல்லுநர்களான நெசவாளர்களை நிரம்பக் கொண்டது மருவூர்ப்பாக்க வணிக வீதி. | இன்றைக்கு கைத்தறி ஆடைகளை விட விசைத்தறி ஆடைகளே அதிகம் விற்கின்றன. வீதிக்கு வீதி பல நவீன ஆடையகங்கள் காணமுடிகின்றது. |
| 3. | முத்தும் மணியும் பொன்னும் அளக்க முடியாத அளவிற்கு மருவூர்ப்பாக்க வீதிகளில் குவிந்து கிடந்தன. | குளிரூட்டப்பட்ட வணிக வளாகங்களில் பலவித அலங்காரங்களுடன் காட்சிப் படுத்தப்படுவதில் வெள்ளி, பொன், வைர நகைகள் முன் நிற்கின்றன. |
| 4. | எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன. | எல்லாவிதப் பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கும் பொருட்டு, பல்பொருள் அங்காடிகள் உள்ளன. |
| 5. | பிட்டு, அப்பம் போன்றவை மருவூர்ப்பாக்க வணிக வீதிகளில் விற்கப்பட்டன. | சைவம், அசைவம் போன்றவற்றிற்கேற்ப தனியாகவும், சேர்ந்தும் உணவகங்கள் உள்ளன. |
| 6. | மீனும், பலவகையான இறைச்சிகளும் விற்கப்பட்டன. | மீன் சந்தை, கோழி மற்றும் இறால் பண்ணைகள், ஆட்டு இறைச்சி கடைகள் ஆகியவைகுறிப்பிடத்தக்கவை. |
| 7. | மருவூர்ப்பாக்க வீதிகளில் பொற்கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தச்சர், தோல்பொருள் செய்பவர், பொம்மைகள் செய்பவர் என்ற பலரும் இருந்தனர். | இன்றைய வணிக வளாகங்களில் பலவகையான நவீன சாதனங்களை விற்பவர்கள் மற்றும் பழுது நீக்குபவர்கள், முகவர்கள் போன்றோர் உள்ளனர். |

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் 6. ஈ

## விரிவானம்

## மங்கையராய்ப் பிறப்பதற்கே...

துணைப்பாடம்

### பகுதி –V (எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா:**

**1. எம்.எஸ்.சுப்புலட்சுமி, பால சரஸ்வதி, ராஜம் கிருஷ்ணன், கிருஷ்ணம்மாள் ஜெகநாதன், சின்னப்பிள்ளை ஆகியோர் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் குறித்து எழுதுக. (ஆக – 22)**

**குறிப்புச் சட்டகம் : முன்னுரை–எம்.எஸ்.சுப்புலட்சுமி–பால சரஸ்வதி–ராஜம் கிருஷ்ணன்–கிருஷ்ணம்மாள் ஜெகநாதன்–சின்னப்பிள்ளை–முடிவுரை**

**முன்னுரை:** விடுதலைக்காக, சமுதாயக்கொள்கைகளுக்காக, மூடநம்பிக்கைகளுக்காக – இப்படி எண்ணற்ற கொடுமைகளுக்காக போராட்டம் நடத்திய தியாகிகள் பலர். அவர்களில் பெண்களும் தம்மால் முடிந்த செயல்களைச் செய்துள்ளார்கள். பாரதத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். சில பெண்கள் "முயன்றால் வெல்லலாம்" என்பதை மனதிற் கொண்டு சமுதாயத்தில் பல சாதனைகளைப் புரிந்துள்ளனர். அவர்களில் ஒரு சிலரைப் பற்றி இங்கு காண்போம்.

**எம்.எஸ்.சுப்புலட்சுமி:** இசைச் சூழலில் வளர்ந்த எம்.எஸ்.சுப்புலட்சுமி இசை மேதை ஆனார். பதினேழு வயதில் கச்சேரியில் பாடி பலரின் பாராட்டைப் பெற்றார். மீரா என்ற திரைப்படத்தில் நடித்ததால் இந்தியா முழுவதும் பாராட்டு இவருக்குக் கிடைத்தது. காந்தியடிகளின் முன் "இரகுபதி இராகவ இராஜாராம்" என்ற பாடலைப் பாடினார். சென்னை வானொலியில் 1947 இல் காந்தியடிகளின் பிறந்த நாளன்று "ஹரிதும் ஹரோ" என்னும் மீரா பஜன் பாடலைப் பாடினார். 1954 ல் இவருக்கு தாமரையணி விருதும், 1974 இல் மகசேசே விருதும், இந்திய மாமணி விருதும் கிடைத்தது. இந்தி, தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மலையாளம், இந்தி, குஜராத்தி ஆகிய இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும்கூடப் பாடியுள்ளார்.

**பால சரஸ்வதி:** இவர் பரதநாட்டியத்தில் சிறப்புப் பெற்றவர். இவர் பதினைந்து வயதில் சென்னையில் உள்ள சங்கீத சமாஜம் என்னும் அரங்கில் தனது நடன நிகழ்ச்சியை நடத்தினார். இவரது நடனத்தைப் பார்த்த பிறகே மரபுசார் நாட்டியத்தைப் பலரும் தீவிரமாக வரவேற்கத் தொடங்கினர். டோக்கியோவில் நடைபெற்ற கிழக்கு மேற்குச் சந்திப்பு நிகழ்வில் இந்தியா சார்பாக நடனம் ஆடினார். இந்நிகழ்வு பரதநாட்டியத்திற்கு உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்தது.

**ராஜம் கிருஷ்ணன்:** இவர் சமூகத்தில் எழுந்த சிக்கல்களைப் பற்றிக் கதைகளாகவும், புதினங்களாகவும் எழுதக்கூடிய ஆற்றல் பெற்றவர். இவர் "பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி" என்னும் வரலாற்றுப் புதினம் ஒன்றை எழுதி வெளியிட்டார். தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கையை "கரிப்பு மணிகள்" என்னும் புதினமாக வடிவமைத்தார். படுகர் இன மக்களின் வாழ்வியலை "குறிஞ்சித் தேன்" என்னும் புதினமாகவும், கடலோர மீனவர்களின் சிக்கல்களை "அலைவாய்க்கரையில்" என்னும் புதினமாகவும், வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டலை "சேற்றில் மனிதர்கள்", "வேருக்கு நீர்" என்னும் புதினங்களாகவும் எழுதியுள்ளார்.

**கிருஷ்ணம்மாள் ஜெகநாதன்:** இவர் காந்தி நடத்திய ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கு பெற்றவர். "உழுபவருக்கே நில உரிமை இயக்கம் " எனத் தொடங்கி "வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறு இயக்கம்" எனத் தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறு பணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தார்.

**சின்னப்பிள்ளை:** இவர் மகளிரின் வாழ்வு மேம்பாட்டுக்காகப் பாடுபட்டார். எல்லாப் பெண்களோடும் இணைந்து வேலை செய்து கூலியை எல்லாருக்கும் சரிசமமாகப் பங்கிட்டவர். வயதானவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் அவரவர் திறமைக்கு ஏற்ற வேலை கொடுத்து அவர்களின் குடும்பங்களுக்கும் உதவியாக இருந்தார். நம் இந்திய நாட்டு நடுவண் முதுன்மை அமைச்சராக இருந்த மாண்புமிகு. வாஜ்பாயிடம் "பெண் ஆற்றல்" விருதையும், தமிழக அரசின்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**விடை :**

சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தமிழ்நாட்டின் ஐவகை நிலப்பிரிவுகளுள், மருதநிலம் பயிரிடத் தகுதியான நிலமாக, விளைநிலங்களை மிகுதியாகப் பெற்ற பகுதியாக இருந்தது. ஒரு உழவனின் செழுமையானது சூரியஒளி, பருவமழை, மண்வளம் ஆகியவற்றைப் பொறுத்தே அமைந்திருந்தது. இயற்கையின் இந்தக் கூறுகளுள், சூரிய ஒளியானது தவிர்க்க முடியாததாகப் பண்டைத் தமிழரால் கருதப்பட்டது.

---

**III) பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**

**வரப் போகிறேன்,இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்.**

**எ.கா :**

**அ) வரப் போகிறேன் :**

**விடை :** இன்னும் சிறிது நேரத்தில் **வரப் போகிறேன்**

**ஆ) இல்லாமல் இருக்கிறது**

**விடை :** இன்று உணவு சுவை **இல்லாமல் இருக்கிறது.**

**இ) கொஞ்சம் அதிகம்**

**விடை :** இன்று வெயில் நேற்றைவிடக் **கொஞ்சம் அதிகம்.**

**ஈ) முன்னுக்குப் பின்**

**விடை :** கையும் களவுமாக மாட்டிக்கொண்ட திருடன் **முன்னுக்குப் பின்** முரணாகப் பேசினான்.

**உ) மறக்க நினைக்கிறேன்.**

**விடை :** எனக்குப் பிடிக்கா நிகழ்வுகளை **மறக்க நினைக்கிறேன்.**

---

**IV) தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.**

**மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகின்றன.**

**விடை :**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | மூவேந்தர் | = | மூன்று + வேந்தர் | = | மூன்று | = | ௩ | |
| 2. | நாற்றிசை | = | நான்கு + திசை | = | நான்கு | = | ௪ | |
| 3. | முத்தமிழ் | = | மூன்று + தமிழ் | = | மூன்று | = | ௩ | (பெ.ஆ.க–6) |
| 4. | இருதிணை | = | இரண்டு + திணை | = | இரண்டு | = | ௨ | (பெ.ஆ.க–6) |
| 5. | முப்பால் | = | மூன்று + பால் | = | மூன்று | = | ௩ | |
| 6. | ஐந்திணை | = | ஐந்து + திணை | = | ஐந்து | = | ௫ | |
| 7. | நானிலம் | = | நான்கு + நிலம் | = | நான்கு | = | ௪ | |
| 8. | அறுசுவை | = | ஆறு + சுவை | = | ஆறு | = | ௬ | |
| 9. | பத்துப்பாட்டு | = | பத்து + பாட்டு | = | பத்து | = | க0 | |
| 10. | எட்டுத்தொகை | = | எட்டு + தொகை | = | எட்டு | = | அ | |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல்
6. எ

## மொழியோடு விளையாடு

**விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க.**




**விடை :**

**<u>சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு விழா</u>**

மார்ச் – 20

மதுரை மாவட்டம் வசந்தம் நகரில் சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்குப் போக்குவரத்துக்கழக காவல்துறை ஆய்வாளர் தலைமையேற்றார். சாலைக் குறியீடுகளை விளக்கி, பாதுகாப்பாக வாகனங்களை ஓட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார். மாணவர்கள், இளைஞர்களின் மனதில் சாலை விதிகளைப் பதிய வைக்க வேண்டும் என்றார். தலைக்கவசம், நான்கு சக்கர வாகனம் ஓட்டும் போது இருக்கைப் பட்டை கட்டாயமாகப்போட வேண்டும். "மிதவேகம் மிக நன்று" என்ற கருத்தினை மனதில் கொண்டு வாகனம் ஓட்டினால் சாலை விபத்துகளைத் தவிர்க்கலாம் என்றார். நிறைவாக வருகை தந்திருந்த பெரியோர், மாணவர்கள், காவல்துறை அதிகாரிகள் அனைவரும் இணைந்து, சாலை விழிப்புணர்வை வலியுறுத்தி காந்தி மியூசியம் வரை ஊர்வலம் நிகழ்த்தினர்.

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் ஏழு

# இயல் 7. பெருவழி

இயல் 7. அ

உரைநடை உலகம்

## சங்கஇலக்கியத்தில் அறம்

உரைநடை

### பாடநூல் வினாக்கள் – விடைகள்

**பலவுள் தெரிக :**

**1. மேன்மை தரும் அறம் என்பது................ (மா–24) (செப் – 21) (பெ.ஆ.க – 4)**

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

**விடை : அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது**

**2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்................ யாவர் ?**
**(ஏப் – 23) (செப் – 20) (பெ.ஆ.க – 6) (செப் – 20)**

அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

**விடை: ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்**

---

**குறுவினா :**

**1. குறிப்பு வரைக: அவையம் (மா–25) (ஏப் - 23) (மே–22) (பெ.ஆ.க –5)**

**விடை :**

★ அறம் கூறும் மன்றங்களே அவையம் எனப்பட்டது.
★ இவை அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன.
★ அறம் "அறக்கண்ட நெறிமான் அவையம்" என்கிறது புறநானூறு.
★ உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.
★ மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

---

**2. சங்க இலக்கியத்தில் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டன எவை ?**

**விடை :**

★ நீர்நிலை பெருக்கி, நிலவளம் கண்டு, உணவுப் பெருக்கம் காண்பதும், அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டன.

---

**சிறுவினா :**

**1. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.**
**(சூலை–24) (சூன்–23)(ஏப்–23)(மே–22) (செப்–21)(பெ.ஆ.க –1,5)**

**விடை :**

**வணிக அறம்:** அறம் செய்வதில் வணிகநோக்கம் இருத்தல் கூடாது.இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறவியில் பெறலாம் என்ற வணிக நோக்கு இருக்கக் கூடாது.

"அறவியலை வணிகன் ஆஅய் அல்லன்"

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.**
**விடை :** வாய்மையைச் சிறந்த அறமாக எவை போற்றுகின்றன ?

**II. மொழிப்பயிற்சிகள்:**
**உரைபத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

**தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.**

**வினா – விடைகள் :**

**1. போர் அறம் என்பது யாது ?**
**விடை :** போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

**2. போர் அறம் பற்றி ஆவூர் மூலங்கிழார் கூறுவது யாது ?**
**விடை :** தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் கூறியுள்ளார்.


**3. யாருக்கெல்லாம் தீங்கு வராத வண்ணம் போர் புரிய வேண்டும் ?**
**விடை :** பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராதவண்ணம் போர் புரிய வேண்டும்.

**1. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக. (அ.மா.வி–19)**
**விடை :**



1) தமிழர் பொருள் ஈட்டி அறம் செய்து இன்புற்றனர்.
2) சங்ககாலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர்.
3) வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது.
4) கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது.
5) வள்ளல்கள் மட்டுமின்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**2. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக. (மே – 22)**
**விடை :**



1) உண்ண உணவும் இருக்க இடமும் தருவதே சிறந்த அறமாகும்.
2) விருந்தோம்பலே சிறந்த அறமாகும்.
3) தனித்து உண்ணாமை தமிழரின் பண்பு.
4) அறமே பெண்களின் சிறந்த பண்பாகும்.
5) நோக்கமின்றி செய்வதே சிறந்த அறமாகும்.

**கற்பவை கற்றபின்**

**"குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" – கொன்றை வேந்தன்**
**"கிழமை பட வாழ்" – ஔவையார் ஆத்திசூடி**
**மேற்கண்ட பாடல் அடிகளின் கருத்துகளை ஒப்பிட்டுப் பேசுக.**
**விடை:**
**சேரன் :** வணக்கம் நண்பர்களே ! எல்லோரும் நலம் தானே ! நாம் இன்றைக்கு வகுப்பில் அறக்கருத்துகள் பற்றிப் படித்தோம். அதைச் சார்ந்த நூல்களில் எனக்கு மிகவும்

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



2. "அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்". – அலகிட்டு வாய்ப்பாடு தருக. (பெ.ஆ.க – 1)

விடை :

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| அரி/யவற்/றுள் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| அரி/தே | நிரை நேர் | புளிமா |
| பெரி/யா/ரைப் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| பே /ணித் | நேர் நேர் | தேமா |
| தம /ராக் | நிரை நேர் | புளிமா |
| கொளல் | நிரை | மலர் |

இக்குறட்பா "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

3. "நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்". – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு காண்க.
(மா–25) (ஏப் – 23)

விடை :

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா/டி | நேர் நேர் | தேமா |
| முறை/செய்/யா | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| மன்/னவன் | நேர் நிரை | கூவிளம் |
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா/டு | நேர் நேர் | தேமா |
| கெடும் | நிரை | மலர் |

இக்குறட்பா "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

4. "பண்என்னாம் பாடற்கியை பின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்". – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு காண்க. (பெ.ஆ.க – 6)

விடை :

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| பண் / என் / னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| பா/டற் | நேர் நேர் | தேமா |
| கியை / பின் / றேல் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கண் / என் / னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| கண் / ணோட் / டம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| இல் /லாத | நேர் நேர் | தேமா |
| கண் | நேர் | நாள் |

இக்குறட்பா "நாள்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கற்பவை கற்றபின்**

**1. பாடநூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளையும் அவற்றின் பாவகைகளையும் வகைப்படுத்திப் பட்டியலிடுக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| ★ வெண்பா | – | திருக்குறள், திருவிளையாடற்புராணம், தேம்பாவணி, முத்தொள்ளாயிரம். |
| ★ கலிவெண்பா | – | பரிபாடல் |
| ★ ஆசிரியப்பா | – | அன்னைமொழியே, சிலப்பதிகாரம், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், காலக்கணிதம். |
| ★ கலிப்பா | – | காசிக்காண்டம், கம்பராமாயணம். |

**இயல் 7. ஊ**

## மொழியை ஆள்வோம் !

**I)** புத்தகத்தில் பார்க்கவும்.

**II) மொழிபெயர்க்க : (மா–25)**

| | | |
|---|---|---|
| 1. | Education is what remains after one has forgotten what one has learned in School. - **Albert Einstein** | கல்வி என்பது ஒருவர் பள்ளியில் கற்றுக்கொண்டதில் மறந்தது போக எஞ்சியிருப்பதாகும். **– ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்** |
| 2. | Tomorrow is often the busiest day of the week. **- Spanish Proverb** | நாளை என்பது பெரும்பாலும் அந்த வாரத்தின் மிகவும் பரபரப்பான நாளாகவே இருக்கும். **–பானிஷ் பழமொழி** |
| 3. | It is during our darkest moments that we must focus to see the light **- Aristotle** | நமது இருள்சூழ்ந்த காலங்களில்தான் நாம் ஒளியைக் காண கவனம் செலுத்தவேண்டும். **– அரிஸ்டாட்டில்** |
| 4. | Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. - **Winston Churchill** | வெற்றி என்பது முடிவுமன்று தோல்வி என்பது தலைவிதியுமன்று. தொடர்ச்சியான தைரியம்தான் சிறப்பானது. **– வின்ஸ்டைன் சர்ச்சில்** |

**III) மரபுத்தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.**

**1. மனக்கோட்டை : (ஏப் – 23)(பெ.ஆ.க – 3)**

**விடை :** படிக்காமல் தேர்ச்சி பெறலாம் என **மனக்கோட்டை**க் கட்டக்கூடாது.

**2. கண்ணும் கருத்தும் : (மா–25) (ஏப் – 23) (பெ.ஆ.க – 4)**

**விடை :** பெற்றோர்கள் குழந்தைகளைக் **கண்ணும் கருத்துமாகப்** பாதுகாத்தனர்.

**அள்ளி இறைத்தல் : (மா–25) (சூன் – 23)**

**விடை :** ஆடம்பர வாழ்வுக்காக பணத்தை **அள்ளி இறைத்தல்** கடனாளி ஆக்கிவிடும்.

**ஆறப்போடுதல் : (சூன் – 23) (பெ.ஆ.க–5)**

**விடை :** கோபத்தில் எதையும் செய்யாமல் **ஆறப்போடுதல்** நல்லது.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தம்பிக்கு திறன்பேசிப்பயன்பாடு குறித்து அறிவுரைகளைக் கூறி கடிதம் ஒன்று எழுதுக. (மா – 24) (பெ.ஆ.க – 2)**

31.12.2025
சிவகங்கை

அன்புள்ள தம்பிக்கு,

உன் பாசமிகு அண்ணன் எழுதுவது. நான் இங்கு நலம். உன் நலமும், அப்பா, அம்மா நலமும் அறிய ஆவல். உன்னுடைய பிறந்த நாளுக்கு புதிய திறன்பேசி ஒன்றை அப்பா வாங்கி பரிசளித்துள்ளார் என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

பாசமிகு தம்பியே! திறன்பேசியை உன்னுடைய படிப்புத் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். சில செயலி மூலம் பழகும் அறிமுகமில்லாத நபர்களை தவிர்க்க வேண்டும். அதிக நேரம் திறன்பேசியை பார்த்துத் தூக்கத்தையும், மிக அருகில் வைத்து வெகுநேரம் பார்த்து கண்கள் பாதிப்படையச் செய்வதையும் தவிர்த்துவிடு. அறிவுசார்ந்த நிகழ்வுகளையும், செய்திகளையும் புதிய திறன்பேசியில் கண்டுகளித்து மகிழ்ச்சியாக வாழ வாழ்த்தும் உன் அன்பு உள்ளம்.

இப்படிக்கு
பாசமிகு அண்ணன்
த. குமரன்

உறைமேல் முகவரி:
த. அன்பு,
த/பெ. ப.தமிழரசன்,
1/15, பாரதியார் தெரு,
பழங்காநத்தம், மதுரை–5

---

**3. நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறு பரிந்துரைத்து நண்பருக்குக் கடிதம் எழுதுக.**
**(செப் – 20)(பெ.ஆ.க – 3)**

24.12.2025
மதுரை–2

அன்புள்ள நண்பன் எழிலனுக்கு,

பாலன் எழுதிக்கொள்வது. இங்கு நான் என் குடும்பத்தினர் அனைவரும் நலம், அதுபோல் நீயும் உன் குடும்பத்தினர் அனைவரும் இறையருளால் நலமுடன் இருக்க வேண்டுகிறேன்.

நண்பா நான் எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் எழுதிய, "கால் முளைத்த கதைகள்" என்னும் நூலினைப் படித்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். இந்நூலில் நான் கற்று அறிந்துகொண்ட கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

உலகம் எப்படித் தோன்றியது என்றகேள்விக்கு இக்கதைகள் வியப்பான பதில்களைத் தருகின்றன. இந்தக் கதைகளைச் சொன்ன மனிதர்கள் குகைகளில் வசித்தார்கள். இருட்டைக் கண்டு பயந்துபோய் அதையொரு கதையாக்கினார்கள். பலநூறு வருடங்கள் கடந்துவிட்ட போதும் இந்தக் கதைகள் கூழாங்கற்களைப் போல் வசீகரமாயிருக்கின்றன.

உலகெங்கும் உள்ள முப்பது பழங்குடியினர்கள் சொன்ன கதைகளிலிருந்து தேர்வு செய்து இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதையும் ஒரு நீதியை எடுத்துக் கூறுவதாய் அமைந்துள்ளது. படித்துப் பேணிப் பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிஷமாய்த் திகழ்கிறது இந்நூல். இந்நூலை நீயும் படித்து மகிழவேண்டுமாய் அன்புடன்கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி நண்பா. நன்றாகப் படித்து தேர்வுகள் எழுத வாழ்த்துகள்.

இப்படிக்கு,
அன்பு நண்பன்
க. பாலன்

உறைமேல் முகவரி:
ம. எழிலன்,
த/பெ. த. மதியழகன்,
1/10, மலைக்கோட்டை,
திருச்சி–3.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**5. முன்னுரை – விசும்பின் துளியும் பசும்புல் தலையும் – காற்று மாசு – பசுமையைக் காப்போம் – மரமும் மழையும் வரமும் உயிரும் – மழைநீர் உயிர் நீர் – முடிவுரை. இக்குறிப்புகளைப் பயன்படுத்தி "இயற்கையைக் காப்போம்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**(சூலை – 24) (பெ.ஆ.க – 3,6)**

**குறிப்புச் சட்டகம் : முன்னுரை – விசும்பின் துளியும் பசும்புல் தலையும் – காற்று மாசு – பசுமையைக் காப்போம் – மரமும் மழையும் வரமும் உயிரும் – மழைநீர் உயிர் நீர் – முடிவுரை.**

**தலைப்பு: இயற்கையைக் காப்போம்**

**முன்னுரை:** நமது சுற்றுச்சூழல் உயிருள்ள காரணிகளையும் உயிரற்ற காரணிகளையும் உள்ளடக்கியது. மழையும், காற்றும், மரமும், வளமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை அல்லவா ? அத்தகைய வளங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் வளங்களின் தற்போதைய நிலையையும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**விசும்பின் துளியும் பசும்புல் தலையும்:** "விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது"

என்றார் வள்ளுவர். மாதம் மும்மாரி பொழிந்து, இந்நாடு வளம்மிக்கதாயிருந்தது. தற்போது நீரின்றி வாடும் நிலை ஏற்பட்டுள்ளது. வெப்பமயமாதலும், நெகிழிப் பயன்பாடும் தற்போது நிலத்தடி நீர்மட்டத்தை பெருக்குவதில் பெருந்தடையாக உள்ளன. அதோடன்றி, மரங்கள் அதிக அளவில் வெட்டப்படுவதும் மழைப்பொழிவு குறைவதற்குப் பெருங்காரணியாக அமைந்துள்ளது.

**காற்று மாசு:** "உங்கள்சுவாசத்தை நிறுத்தும் முன்
காற்று மாசுபாட்டை நிறுத்துங்கள்"

மக்கள் தொகைப் பெருக்கம், மக்கள் நெருக்கம், தொழிற்சாலைக் கழிவு, வாகனப்புகை போன்றவற்றால் நிலம், நீர், காற்று அனைத்தும் மாசடைகிறது. இதனால் தாவரங்கள், உயிரனங்கள் பல நோய்களுக்கு ஆட்பட்டு, அழியும் நிலைக்குத் தள்ளப்படுகிறது. இயன்றவரை மக்கள் பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தினால் காற்று மாசுபாட்டைக் குறைக்கலாம்.

**பசுமையைக் காப்போம்:** "மரம் தான் மரம் தான் எல்லாம் மரம்தான்
மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்"

சூரிய ஒளி, மழை, தாவரம், காற்று இந்த நான்கும் பசுமையை நிலைநாட்டுவன. உலக வெப்பமயமாதல், குளிர்சாதனப்பெட்டி பயன்பாடு போன்றவற்றால் பாதிப்புக்குள்ளாகும் பசுமையை மீட்டுக் கொணர்வது நமது ஒவ்வொருவரின் கடமையாகும். வீட்டிற்கு ஒரு தோட்டம் அமைத்தல், பொதுவிடங்களில் மரக்கன்று நடுதல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணி நடத்துதல் போன்ற செயல்களை மேற்கொண்டு நாம் பசுமையைக் காக்க வேண்டும்.

**மரமும் மழையும் வரமும் உயிரும்:** "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி"

ஒவ்வொரு மரமும் பல்லாயிரம் உயிர்களுக்குப் புகலிடம் ஆகும். மரமும், காற்றும் மழைக்கு ஆதாரம்ஆகும். ஆகையால், பசியின்றி வாழவும், தானம் தவம் இரண்டும் தொடர்ந்து நிலைபெறவும் மழைநீர் அவசியமாகிறது. காடுகள் அழிக்கப்படுவதைத் தடுப்பதும், நீர்நிலைகளைப் பாதுகாத்துப் பராமரிப்பதும் நீர்வளம் பெருக நாம் செய்ய வேண்டிய வழிமுறைகளாகும்.

**மழைநீர் உயிர் நீர்:** "நீரின்றி அமையாது உலகு", "மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்" என்ற வரிகளும் நீரின் இன்றியமையாமையையும், நீர் தருகின்ற மழையின் சிறப்பையும் தமிழ்ப்புலவர்கள் காலந்தோறும் போற்றி வந்துள்ளனர் என்பதை உணர்த்துகிறது. இன்றைய தாகத்திற்கும், நாளைய தண்ணீர் தேவைக்கும் மழைநீரை சேமித்தாலே போதும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**18. குறிப்புகளைக் கொண்டு "சுற்றுச்சூழல் பாதுகாப்பு" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.**
**குறிப்புகள் : சுற்றுச்சூழல் சீர்கேடு – காற்று மாசு– நீர் மாசு–நிலம் மாசு–ஒலிமாசு–தவிர்க்கும் முறைகள்–மாணவர் பங்கு.**

**குறிப்புச்சட்டகம் : முன்னுரை–காற்று மாசு– நீர் மாசு–நிலம் மாசு–ஒலிமாசு–தவிர்க்கும் முறைகள்–மாணவர் பங்கு–முடிவுரை.**

**தலைப்பு:** **சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

**முன்னுரை:**

சுற்றுச்சூழல் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அது எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**காற்று மாசு:**

தொழிற்சாலை, வாகனம் போன்றவற்றிலிருந்து வரும் புகை மூலமும், நெகிழி போன்றபொருள்களை எரிப்பதன் மூலமும் காற்று மாசடைகிறது. இதனை காற்று மாசடைதல் என்கிறோம்.

**நீர் மாசு:**

குளம், குட்டை, ஏரி போன்ற நீர் நிலைகளில் குப்பைகளை வீசுவதன் மூலமும் தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவுகள் மூலமும் இயற்கை நீர் மாசடைகிறது. இதனை நீர் மாசடைதல் என்கிறோம்.

**நிலம் மாசு:**

நிலத்தில் கழிவுகளைக் கொட்டுவதன் மூலம் நிலம் மாசுபாடு அடைகிறது. இதனை நிலம் மாசடைதல் என்கிறோம்.

**ஒலிமாசு:**

சாலையில் வாகனங்கள் எழுப்பும் ஒலியும், ஒலிபெருக்கி, வானொலி மற்றும் குறும்படங்கள் மூலம் வரும் ஒலியைக் கேட்கும் போதும் மனிதனின் கேட்கும் திறன் பாதிக்கப்படுகிறது. இதனை ஒலி மாசு என்கிறோம்.

**தவிர்க்கும் முறைகள்:**

நீர்நிலைகளை அசுப்படுத்தாமல் இருக்க வேண்டும். நிலத்தில் குப்பை மற்றும் நெகிழிப் பொருட்களை எரிக்கக் கூடாது. பொது இடங்களில் ஒலி எழுப்புதல் கூடாது.

**மாணவர் பங்கு:**

மாசுபடுதலைத் தடுக்க மாணவர்களாகிய நாம் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். நீர், நிலம், ஒலி ஆகியவை மாசடைவதைத் தடுக்க வானொலி, தொலைக்காட்சி மற்றும் குறும்படங்கள் மூலம் விளம்பரம் செய்யலாம்.

**முடிவுரை:**

வீட்டையும் நாட்டையும் சுற்றுச்சூழலையும் மாசடையாமல் பாதுகாப்போம்!. ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்வோம்!!.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# செலக்சன்

எங்கள் வெளியீடுகள்

3 முதல் 10 வகுப்பு வரை

தமிழ்

ஆங்கிலம்

கணக்கு

அறிவியல்

சமூக அறிவியல்

3 முதல் 6 வகுப்பு வரை 5 in 1

தமிழ் வழி & ஆங்கில வழி

**அன்பு நிலையம்**

129, வடக்கு ஆவணி மூல வீதி

மதுரை - **625001**

94430 43338

94430 46662

www.Padasalai.Net